‘மாதிரி சட்டசபை’ தான் ஸ்டாலின் நடத்த முடியும்; நிஜ சட்டசபையில் அவரால் முதல்வராக முடியாது

அம்பத்தூர் பொதுக்கூட்டத்தில் அமைச்சர் பென்ஜமின் பேச்சு

திருவள்ளூர், ஜூலை 11– ஸ்டாலின் மாதிரி சட்டசபை தான் நடத்த முடியும் ஒரு போதும் நிஜ சட்டசபையில் அவரால் முதல்வராக முடியாது என்று அம்பத்தூரில் நடந்த பொதுக் கூட்டத்தில் அமைச்சர் பா.பென்ஜமின் பேசினார்.

அண்ணா தி.மு.க. ஒருங்கினைப்பாளர் துணை முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் இணை ஒருங்கினைப்பாளர் முதலமைச்சர் எடப்பாடி கே.பழனிசாமி ஆகியோரின் ஆனைக்கிணங்க திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் அம்பத்தூர் சட்டமன்ற தொகுதி சார்பில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும், அம்பத்தூர் சட்டமன்ற உறுப்பினருமான வி.அலெக்சாண்டர் எம்.எல்.ஏ., தலைமையில் காவிரி நதி நீர் வெற்றி விளக்க பொதுகூட்டம் நடைப்பெற்றது, இதில் சிறப்பு அழைப்பாளராக மதுரவாயல் பகுதி செயலாளரும் ஊரக தொழிற்துறை அமைச்சருமான பா.பென்ஜமின், தமிழ்வளர்ச்சி துறை அமைச்சர் க.பாண்டியராஜன், அண்ணா தொழிற்சங்க பேரவை தலைவர் தாடி மா.ராசு, தலைமை கழக பேச்சாளர் அஞ்சுலட்சுமி ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

கூட்டத்தில் ஊரக தொழிற் துறை அமைச்சர்பா.பென்ஜமின் பேசியதாவது:

தமிழகத்தின் ஜீவாதார உரிமைகளை மீட்டேடுத்த அண்ணா தி.மு.க. அரசுக்கு நன்றி தெரிவிக்கும் வெற்றி விளக்க பொதுகூட்டம் நடத்த தகுதி வாய்ந்த இயக்கம் அம்மாவின் அரசும் அண்ணா தி.மு.க.வும் தான் காவிரி நீரை அல்ல தமிழகத்தில் ஓடும் எந்த ஒரு நதி நீரை பற்றி பேசுவதற்கு தி.மு.க. விற்கு எந்த தகுதியும் இல்லை. விவசாய மக்களின் முதல் எதிரி கருணாநிதியும் தி.மு.க.வும் தான். ஆனால் இன்று மக்களை திசை திருப்பி போராட்டம், கல்வீசு என்று எப்படியாவது இந்த அம்மாவின் அரசை கலைக்க அரும்பாடு படும் ஸ்டாலின் காலம் முழுவதும் மாதிரி சட்டசபை தான் நடத்த முடியும் நிஜ சட்டசபையில் அவரால் முதல்வராக முடியவே முடியாது.

அம்மாவின் வழியில் ஆட்சி செய்யும் ஒருங்கினைப்பாளரும், துணை முதலமைச்சருமான ஓ.பன்னீர்செல்வம் மற்றும் இனை ஒருங்கினைப்பாளரும், முதலமைச்சருமான எடப்பாடி கே.பழனிசாமி ஆகியோர் சட்டத்தின் மூலம் இன்று காவிரிநதி நீர் விஷயத்தில் வெற்றி கண்டு என்றுமே விவசாயிகளின் பாதுகாவலன் நாங்கள் தான் என்று எதிர்க்கட்சிகளுக்கு பதிலடி கொடுத்துள்ளனர். மக்களோடு மக்களாக அண்ணா தி.மு.க. அரசு திகழ்ந்து வருகிறது.

இவ்வாறு அவர் பேசினார்,

கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் மாதவரம் வி.மூர்த்தி, மாவட்ட அவைதலைவர் காசு ஜனார்தனம், துணை செயலாளர் மாதவரம் டி.தஷ்னாமூர்த்தி, பொருளாளர் பி.ராஜேந்திரன், புலவர் ரோஜா, பி.ராஜேஸ்வரி, அம்பத்தூர் பகுதி செயலாளர் என்.அய்யனார், கிருஷ்னன், எம்.டிமைக்கேல்ராஜ், கே.பி.முகுந்தன், வழக்கறிஞர் முருகேசன்டன்லப்வேலன், குப்பம்மாள் வேலா யுதம், உட்பட பகுதி நிர்வாகிகள் வட்ட கழகநிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் அலெக்சாண்டர் எம்.எல்.ஏ சிறப்பாக செய்திருந்தார்

முன் ஜாமீன் நிபந்தனைகளை நிறைவேற்ற நேரமில்லையா?

பாரதிராஜாவுக்கு உயர் நீதிமன்றம் கேள்வி

சென்னை, ஜூலை 11– இயக்குநர் பாரதிராஜா தினமும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் நிலையில் முன் ஜாமீன் நிபந்தனைகளை நிறைவேற்ற முடியவில்லையா என சென்னை உயர் நீதிமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது.

சென்னையில் ஜனவரி 18ஆம் தேதி நடைபெற்ற திரைப்பட விழா ஒன்றில் பேசிய இயக்குநர் பாரதிராஜா, இந்து கடவுளான விநாயகரை இறக்குமதி கடவுள் என்று விமர்சித்ததுடன், ஆண்டாள் விவகாரத்தில் கவிஞர் வைரமுத்துவுக்குத் தலைகுனிவு ஏற்பட்டால் தலையை எடுக்கவும் தயங்க மாட்டோம் என்றும் பேசினார்.

இதுதொடர்பாக, இந்து மக்கள் முன்னணி மாநில அமைப்பாளர் வி.ஜி.நாராயணன் அளித்த புகாரின் அடிப்படையில் வடபழனி போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். இந்த வழக்கில், முன்ஜாமீன் கேட்டு சென்னை உயர் நீதிமன்றத்தில் பாரதிராஜா தாக்கல் செய்த மனுவை விசாரித்த நீதிபதி பி.ராஜமாணிக்கம், நிபந்தனை முன் ஜாமீன் வழங்கி மே 23ஆம் தேதி உத்தரவிட்டார்.

மூன்று வாரங்களுக்கு வடபழனி காவல் நிலையத்தில் ஆஜராகிக் கையெழுத்திட உத்தரவிட்டதுடன், சைதாப்பேட்டை நீதிமன்றத்தில் சரணடைந்து ஜாமீன் பெற்றுக்கொள்ள உத்தரவிடப்பட்டது. ஆனால் குறிப்பிட்ட காலத்துக்குள் நீதிமன்றத்திற்குச் செல்ல முடியவில்லை என்றும், எனவே முன் ஜாமீன் உத்தரவைப் பெறுவதற்கான கால அவகாசத்தை நீட்டிக்க வேண்டுமென புதிய மனுவை பாரதிராஜா தாக்கல் செய்தார்.

அந்த மனு இன்று நீதிபதி ராஜமாணிக்கம் முன் விசாரணைக்கு வந்தது.

அப்போது, “தினமும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதாக இயக்குநர் பாரதிராஜா பற்றி செய்திகள் வருகின்றன. அதற்கெல்லாம் செல்லமுடிந்த அவரால் நீதிமன்ற உத்தரவை நிறைவேற்ற முடியவில்லையா, நிவாரணம் தேடி நீதிமன்றம் வரும்போது அதன் நிபந்தனைகளை ஏன் நிறைவேற்ற முடியவில்லை என நீதிபதி கேள்வி எழுப்பினார். மேலும், கால நீட்டிப்பு கோரி கூடுதல் மனுவாகத் தாக்கல் செய்யாமல் புதிய மனுவாகத் தாக்கல் செய்ததும் தவறு என்பதைச் சுட்டிக்காட்டினார்.

பாரதிராஜாவின் மனுவுக்கு புகார் தாரரான நாராயணன் தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டது. இதுதொடர்பாக பதில் மனுவைத் தாக்கல் செய்ய நாராயணனுக்கு உத்தரவிட்ட நீதிபதி, மனு மீதான விசாரணையை ஜூலை 17ஆம் தேதிக்கு தள்ளி வைத்தார்.

மகாபலிபுரம் பூஞ்சேரி சந்திப்பிலிருந்து எண்ணூர் துறைமுகம் வரை

சென்னை சுற்றுவட்ட சாலை அமைத்தல்: பொதுமக்கள் கருத்து கேட்பு கூட்டம்

காஞ்சீபுரம் கலெக்டர் பொன்னையா பங்கேற்பு

காஞ்சீபுரம், ஜூலை 11– காஞ்சீபுரம் மாவட்டம், செங்கல்பட்டில் மகாபலிபுரம் பூஞ்சேரி சந்திப்பிலிருந்து எண்ணூர் துறைமுகம் வரை அமைக்கப்படும் சென்னை சுற்றுவட்ட சாலை அமைத்தல் தொடர்பான பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் மாவட்ட கலெக்டர் பா.பொன்னையா தலைமையில் நடைபெற்றது.

செங்கல்பட்டு கோட்ட பொறியாளர் (நெ) அலுவலக வளாகத்தில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம் சார்பில் தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலை துறையால் மகாபலிபுரம் பூஞ்சேரி சந்திப்பிலிருந்து எண்ணூர் துறைமுகம் வரை சிங்கபெருமாள்கோயில், திருபெரும்புதூர், திருவள்ளூர், தாமரைப்பாக்கம், பெரியபாளையம், புதுவயல், காட்டுப்பள்ளி வழியாக சென்னை சுற்றுவட்ட சாலை அமைத்தல் தொடர்பான பொதுமக்கள் கருத்து கேட்டுணரும் கூட்டம் மாவட்ட கலெக்டர் பா.பொன்னையா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் சம்பந்தப்பட்ட பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள், விவசாயிகள் பங்கேற்று அவரவர் கருத்துக்களை, கோரிக்கைகளை வைத்தனர். பிறகு மாவட்ட கலெக்டர் பேசியதாவது:– தமிழ்நாடு அரசு நெடுஞ்சாலை துறையால் மகாபலிபுரம் பூஞ்சேரி சந்திப்பிலிருந்து எண்ணூர் துறைமுகம் வரை அமைக்கப்படும் சென்னை சுற்றுவட்ட சாலை அமைத்தல் பணிக்காக நிலையெடுப்பு நடைபெறவுள்ளது. நிலையெடுப்பின்போது நிலம் மட்டுமின்றி வீடுகள், கடைகள் உள்ளிட்ட சொத்துக்களுக்கும் பாதிப்புகள் வருகிறது. அப்பாதிப்புகளை சரிசெய்யும் விதத்தில் சரியான அளவீட்டையும், தேவையான இழப்பீட்டினையும் வழங்க சரியான கணக்கெடுக்கும் பணி நடவடிக்கை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் மேற்கொள்ளப்படும். சொத்துக்களின் வழிகாட்டுதல் மதிப்பு மற்றும் சந்தை மதிப்புகளை கொண்டு இழப்பீடு தொகை வழங்கப்படும். தற்போது முதல்கட்ட நடவடிக்கைகள்தான் எடுக்கப்பட்டு வருகின்றன. நில எடுப்பில் அவசரம் காட்டப்படமாட்டது. உடனடியாக வீடுகளை காலி செய்ய சொல்வார்கள் என்கிற பயம் தேவையில்லை. பயிரிடப்பட்டுள்ள பயிர்களுக்கு பாதிப்பு இன்றி தான் நடவடிக்கை எடுக்கப்படும். எனவே, நிலஎடுப்பு முழுமையாக எடுப்பதற்கு கால அவகாசம் தேவைப்படும். அதற்குள் இழப்பீட்டு தொகை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. சிலர் வயலுக்கு நீர்பாய்ச்சும் போர்வெல் பாதிக்கப்படுவதாக கூறியுள்ளனர். மின்சார வாரியம் மூலம் அவர்களுக்கு சொந்தமான வேறு இடத்தில் போர்வெல் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

அதேபோல் இரண்டாக பிரியும் வயல்களுக்கு சாலை அமைக்கும்போது, சாலையின் குறுக்கே குறிப்பிட்ட இடைவெளியில் வழியும், கல்வெட்டும் அமைக்க வழிகாணப்படும். மக்கள் கூறிய கோரிக்கைகள் அனைத்தும் வீடியோ பதிவு செய்யப்பட்டுள்ளது. அதனை அரசுக்கு தெரிவித்து, அரசு வழிகாட்டுதலின்படி மேலும் தேவையான உதவிகளை மாவட்ட நிர்வாகத்தின் மூலம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு கலெக்டர் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில் செங்கல்பட்டு வருவாய் கோட்டாட்சியர் டி.முத்து வடிவேல், நெடுஞ்சாலைத்துறை கோட்ட பொறியாளர் செந்தில், உள்பட அதிகாரிகள் கலந்து கொண்டனர்

தமிழ்நாடு அரசு

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை

மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விருதுநகர்.

மின் ஒப்பந்தப்புள்ளி கோரும் படிவம் எண். ந.க.சி6/1073/2014 நாள்: 02.07.2018

ஒப்பந்த படிவம் இனம் வாரியான விலை

1) முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in என்ற இணைய தள முகவரியினை பார்வையிடவும்.
2) விருதுநகர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநரால் 2017-18 ஆம் ஆண்டிற்கான ஒப்படைக்கப்பட்ட ஒட்டுமொத்த வருவாய் திட்டத்தின் கீழ் விருதுநகரில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறைக்கான ஒருங்கிணைந்த அலுவலக வளாக கட்டிடம் கட்டும் பணிக்கு மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3)சிப்பம் வாரியான ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை www.tntenders.gov.in என்ற இணைய தள முகவரியில் இலவசமாக **11.07.2018** முதல் **10.08.2018** வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4) ஒப்பந்த ஆவணங்கள் பதிவிறக்கம் செய்ய, சமர்ப்பிக்க மற்றும் திறக்க பொதுவான நாள் மற்றும் நேரம்.

1.	மின் ஒப்பந்தப்புள்ளி பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்	**10.08.2018, பி.ப. 3.00** மணி வரை
2.	மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம்	**10.08.2018, பி.ப. 4.00** மணி முதல்

திட்ட இயக்குநர்,
செ.ம.தொ.இ.2660/ஒ.புள்ளி /2018 **மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, விருதுநகர்.**

ஈசாப் இந்தியா லிமிடெட் ESAB

CIN:L29299TN1987PLC058738

பதிவு அலுவலகம் : எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058. தொ.பேசி எண். 044-4228 1100 இ-மெயில்: investor.relations@esab.co.in

முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதிக்கு (IEPF) பங்குகளை மாற்றுவது தொடர்பாக பங்குதாரர்களுக்கு அறிவிப்பு

நிறுவனங்கள் சட்டம், 2013 பிரிவு 124(6) மற்றும் செப்டம்பர் 7, 2016 முதல் அமலுக்கு வந்த முதலீட்டாளர் கல்வி பாதுகாப்பு நிதி ஆணையம் (க்ணக்கு வைப்பு தணிக்கை, மாற்றல் மற்றும் திருப்பியளித்தல் (விதிகள்) – 2016 ஷரத்துகள் மற்றும் அதற்குத் தொடர்புடைய அறிவிக்கைப்படி. இதன் மூலம் அறிவிப்பது யாதெனில், தொடர்ந்து 7 ஆண்டுகள் அல்லது அதற்கு மேல் செலுத்தப்படாமல் அல்லது கோரப்படாமல் கிடக்கும் ஈவுத்தொகைகள் தொடர்பான அனைத்துப் பங்குகளையும் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி IEPF அனாமத்துக் கணக்கிற்கு மாற்ற வேண்டிய அவசியம் கம்பெனிக்கு உள்ளது.

தற்போது கம்பெனிகள் சட்டம் 2013 ஷரத்துகளின்படி, 2011-ம் நிதியாண்டிற்கான இடைக்கால ஈவுத்தொகைகள் அறிவிக்கப்பட்டு வழங்கப்பட்ட நிலையில், தொடர்ந்து 7 ஆண்டுகளாக கோரப்படாமலுள்ள அல்லது செலுத்தப்படாமலுள்ள ஈவுத்தொகைகள் IEPFக்கு மாற்றப்பட வேண்டியுள்ளது.

மேலும், மேற்காணும் விதிகளின் இதன் மூலம் அறிவிப்பது யாதெனில்; IEPF அனாமத்துக் கணக்கிற்கு மாற்றப் படவுள்ள பங்குகள் விவரங்களுடன், கம்பெனி / பதிவேடு மற்றும் பங்குமாற்றல் ஏஜன்ட் (RTA) ஆவணங்களில் உள்ள சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் முகவரிக்குத் 21 ஜூன், 2018 அன்று தனித்தனியாக ஏற்கெனவே அறிவிப்புகள் அனுப்பப்பட்டு விட்டன. அந்தப் பங்குதாரர்களின் விவரங்கள் நிறுவனத்தின் இணையதளத்திலும் www.esabindia.com வெளியிடப்பட்டுள்ளன.

எனவே, சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள், வழங்கப்படாமல் / கோரப்படாமல் கிடக்கும் இடைக்கால ஈவுத்தொகைகள் 25 ஆகஸ்ட் 2018 அன்று அல்லது முன்னர் கோருமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். தவறினால் அவர்களது பங்குகள் IEPF அனாமத்துக் கணக்கிற்கு மாற்றப்படும்.

மேற்காணும் சட்டப்படியான தேவைகளைக் கடைப்பிடிக்க IEPFக்கு மாற்றப்படவுள்ள தாள் வடிவிலான பங்குச்சான்றிதழ்களுக்கு நகல் பங்குச் சான்றிதழ்களையும், டிமேட் பங்குச் சான்றிதழ்களுக்கு கையொமிட்ட டெலிவரி குறிப்புச் சீட்டுகளையும் வழங்க நிறுவனம் உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதையும், IEPF அனாமத்துக் கணக்கிற்கு 25 ஆகஸ்ட் 2018-க்குப்பிறகு மாற்றப்படவுள்ள பங்குகள் அந்தந்த டிமேட் கணக்கில் பற்று வைக்கப்படும் (Debited) என்பதையும் கவனத்தில் கொள்ளவும். IEPF அனாமத்துக் கணக்கிற்கு மாற்றப்பட்டபிறகு பங்குகளையும் ஈவுத்தொகைகளையும் கோரவிரும்பும் பங்குதாரர்கள் மேற்காணும் விதிகள்படியுள்ள உரிய படிவம் IEPF-5-ல் IEPF ஆணையத்திற்குத் தனியாக விண்ணப்பிக்க வேண்டும் படிவங்கள் IEPF இணையதளத்தில் www.iepf.gov.in கிடைக்கின்றன.

மேலும் விவரங்களுக்கு செலுத்தப்படாமலுள்ள மற்றும் கோரப்படாமலுள்ள ஈவுத்தொகைகளைக் கோரவும் மற்ற விவரங்களை அறியவும் சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் நிறுவனத்தின் RTAயைத் தொடர்புக் கொள்ளவும்:

இன்டகரேட்டட் ரெஜிஸ்ட்ரி மானேஜ்மெண்ட் சர்வீசஸ் (பி) லிட்.,
2வது தளம், 'கென்சஸ் டவர்' எண்.1, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் சாலை, தி. நகர், சென்னை - 600 017.
தொலைபேசி: 044 28140801-803 / Fax: 044-28142479
மின்னஞ்சல்: srirams@integratedindia.in

ஈசாப் இந்தியா லிமிடெட் சார்பாக
S. வெங்கடகிருஷ்ணன்
நிறுவன செயலாளர்

சென்னை
11 ஜூலை, 2018

3வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் கள்ளக்குறிச்சி
M.C.O.P.No.19/2017

காத்தாரூபி வகையறா ..மனுதாரர்கள்
VS
செந்தில் குமார், 10.sss பில்டிங், A.V. ரோடு, சாமராஜ்பேட், பெங்களூர் ....1ம் எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மனுதார்கள் உம்மீது மோட்டார் வாகன விபத்துக்கு இழப்பீட்டு கோரி மேற்படி கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்து அதன் பேரில் 20.07.2018 அன்று காலை 10.30 மணிக்கு விசாரனைக்கு வைக்கப்ட்டுள்ளது அன்றையதினம் கோர்ட்டார் உம்மை அழைக்கும் போது நீர் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமோ ஆஜராகி உமது தரப்பு ஆட்சேபணையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது இதில் நீர் தவணம் பட்சத்தில் ஷ தாவாவில் உமக்கெதிராக ஒரு தலைப்பட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் கண்டிப்பாய் அறியவும்.

கு. ஜெயச்சந்திரன்
ஜெ.ஜனார்த்தனன்
வழக்கறிஞர்

வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் விழுப்புரம்

S.குப்புசாமி
த/பெ. சாமிநாதக் கவுண்டர்
நெ.2/4. தெற்கு தெரு, செம்மார் கிராமம்,
திருக்கோவிலூர் தாலுக்கா,
விழுப்புரம் மாவட்டம் மனுதாரர்

மனுதாரர் தெரிவிக்கும் பொது அறிவிப்பு

மனுதாரர் S.குப்புசாமி த/பெ. சாமிநாதக் கவுண்டர் என்ற நான் எனது தகப்பனார் சாமிநாதக் கவுண்டர் 04.11.1978 அன்று மேற்படி முகவரியிலுள்ள எனது வீட்டில் இறந்ததை அப்போது விபரம் தெரியாத காரணத்தால் பதிவு செய்யாமல் விடுபட்டுவிட்ட. தற்துபோது எனது தகப்பனார் கவுண்டர் இறப்பு சான்றிதழ் வேண்டி மேற்படி விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். இதில் எவருக்கேனும் ஆட்சேபணை இருப்பின் 15 தினங்களுக்குள் மேற்படி நீதிமன்றத்தில் எழுத்து மூலமோ நேரிலோ ஆஜராகி தெரிவிக்கலாம். தவறினால் இம்மனுவின் பேரில் ஆட்சேபணை இல்லை என ஒருதலை பட்சமாக ஏற்கப்பட்டு உத்தரவு ஆகிவிடும் என்பதை இதன் மூலம் அறியவும்.

S.குப்புசாமி
மனுதாரர்

XV JUDGE
IN THE SMALL CAUSES COURT CHENNAI
E.P.No.237 OF 2018
IN
R.C.O.P.No.490 of 2016

Mrs.Swapna Pratap, ... Decree Holder /Petitioner / Landlady
-Vs-
1.T.Prabhakaran & Another, ... Judgment Debtors/ Respondents /Tenants

To,
Mr.T.Prabhakaran,
S/o.Mr.Tamilselvan,
Flat No.T1, Seven Hills Apartment, Old No.12, New No.19/11, First Cross Street, Sivagamipuram, Thiruvanmiyur, Cherinai- 600 041.

Whereas the Petitioner above named has filed the above Execution Petition against you, hence you are hereby instructed to appear before the Hon'ble XV Judge, Small Causes Court, Chennai on 27.07.2018 at 10.30AM either inperson or through your pleader without fail if otherwise the matter would be decided in your absence.

C.PRAKASAM &
K.BALAJI
COUNSEL FOR PETITIONER

வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் கள்ளக்குறிச்சி
பி.இ.சி.ப.வ.எண்.
அ6/290383/2018

முனியப்பிள்ளை, S/o.ஏழுமலை, பூட்டை கிராமம், சங்கராபுரம் வட்டம், ..மனுதாரர்

அறிவிப்பு

மனுதாரர் முனியப்பிள்ளை என்கிற நான், எனது மகள் சுவேதா என்பவர் பூட்டை கிராமத்தில் 15.3.2005ல் பிறந்தார் என்பதை கவனக்குறைவாக பதிவு செய்யாமல் இருந்து விட்டபடியால், மேற்படி எனது மகள் சுவேதா என்பவரின் பிறப்பு சான்று பள்ளிப் படிப்பிற்குத் தேவைப்படுவதால், மேற்படி எனது மகள் சுவேதா என்பவரின் பிறப்பு சான்று கேட்டு மேற்படி நீதிமன்றத்தில் மனு கொடுத்துள்ளேன் இம்மனுவின் மீது எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் மேற்படி நீதிமன்றத்தில் நேரிலோ அல்லது எழுத்து மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபனைகளை, இந்த விளம்பரம் வெளியான 15 நாட்களுக்குள் தெரிவித்துக் கொள்ள வேண்டும் தவறினால் எனது மனுவின் மீது எவ்வித ஆட்சேபனையும் இல்லை என மேற்படி நீதிமன்றதால் ஒருதலைபட்சமாக சான்று வழங்க உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை அறியவும்.

ஏ.முனியப்பிள்ளை
மனுதாரர்

பெயர் மாற்றம்

Surname: Chintam, Given Name: Padmavathy, கணவர் பெயர்: Brahmanandha Reddy, பிறந்த தேதி: 08.03.1977, எண்.35/36, 7வது குறுக்கு தெரு, சௌாய் நகர் மேற்கு, சென்னை– 600 030, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SURNAME: CHINTAM, GIVEN NAME: PADMAVATHI,** என்று அழைக்கப்படுகிறேன்.

Surname: Chintam, Given Name: Padmavathy

பெயர் மாற்றம்

ச.கோ.மா.பரமானந்தன், தந்தை பெயர்: மாணிக்கம், பிறந்த தேதி: 07.06.1948, எண்.758C, காயிதே மில்லத் தெரு, ஆர்மஜ நகர், புதுப்பட்டினம், கல்பாக்கம், காஞ்சிபுரம் –603 102, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **ச.கோ.மா.பரமானந்தம்,** என்று அழைக்கப்படுகிறேன்.

ச.கோ.மா.பரமானந்தன்

பெயர் மாற்றம்

RITA JACQUELINE, தந்தை பெயர்: Savarimuthu Francis, பிறந்த தேதி: 28.01.1981, எண்.4/60, வேதகிரி தெரு, சிந்தாதிரிபேட்டை, சென்னை– 600 002, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **J.RITA JACQULIN W/o. JEYA BERYL,** என்று அழைக்கப்படுகிறேன்.

RITA JACQUELINE

பெயர் மாற்றம்

SIVA (HINDU), தந்தை பெயர்: Balsamy, பிறந்த தேதி: 08.08.1996, எண்.1209–I, ஆண்டிகுறும்பலூர், பறவை (கிழக்கு), ஆண்டி குறும்பலூர், பெரம்பூர் – 621717, என்ற முகவரியில் வசிக்கும் நான் இந்து மதத்திலிருந்து இஸ்லாம் மதத்திற்கு மாறியதால் இனி **MOHAMMED ZUBAIR (ISLAM),** என்று அழைக்கப்படுகிறேன்.

SIVA (HINDU)

NAME CHANGE

My Adopted Daughter, S.Dhaarini, Biological Daughter of Thiru Suresh Babu, born on 24th March 2008 (Native District: Krishnagiri), residing at No.49, 8th Cross Telephone Exchange Road, Indira Nagar, Hosur, Krishnagiri –635 109, shall henceforth be known as **DHAARINI SATISH.**

SATISH K N,
(Adopted Father)

பெயர் மாற்றம்

Saravanan.G (Govindhan) (Hindu), தந்தை பெயர்: Govindhan, பிறந்த தேதி: 28.05.1982, எண்.16C, சிவா பிளாட்ஸ், 2வது மாடி, பிராமின் தெரு, வேளச்சேரி, சென்னை– 600 042, என்ற முகவரியில் வசிக்கும் நான் இந்து மதத்திலிருந்து இஸ்லாம் மதத்திற்கு மாறியதால் இனி **MOHAMMED YASIN.G (ISLAM),** என்று அழைக்கப்படுகிறேன்.

Saravanan.G (Govindhan) (Hindu)

பெயர் மாற்றம்

R.DHANALAKSHMI, பிறந்த தேதி: 29.08.2001, பிளாட் எண்.25, அண்ணாமலை நகர், அன்னை இந்திரா நகர், புதிய ரெயில்வே ஸ்டேஷன் அருகில், பெரிய காஞ்சிபுரம், என்ற முகவரியில் வசிக்கும் எனது மகன் இனி **R.PAVITHRA,** என்று அழைக்கப்படுகிறார்.

RAVI,
தந்தை

பெயர் மாற்றம்

Sanjaykumar Mahendrakumar, தந்தை பெயர்: Mahendrakumar Manilal Shah, பிறந்த தேதி: 30.05.1967, எண்.12/6, 1வது மாடி, டி.என்.எச்.பி. ப்ளாட்ஸ், மேற்கு சர்விஸ் ரோடு, நொளம்பூர், சென்னை–600 095, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SANJAY MAHENDRABHAI SHAH,** என்று அழைக்கப்படுகிறேன்.

Sanjaykumar Mahendrakumar

பெயர் மாற்றம்

UMA KRISHNAMOORTHY, கணவர் பெயர்: Krishnamurthy, பிறந்த தேதி: 28.05.1959, ப.எண்.1, பு.எண்.2, 11வது குறுக்கு தெரு, புது காலனி, குரோம்பேட்டை, சென்னை–600 044, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **UMA KRISHNAMURTHY,** என்று அழைக்கப்படுகிறேன்.

UMA KRISHNAMOORTHY

பெயர் மாற்றம்

SATHI KUMARI, கணவர் பெயர்: Janarthanam Enthala Mannar Naidu, பிறந்த தேதி: 24.07.1963, எண்.9, Sharon Apartments, பள்ளியரசு தெரு, அண்ணா நகர் கிழக்கு, சென்னை– 600 102, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SATHY KUMARI,** என்று அழைக்கப்படுகிறேன்.

SATHI KUMARI

பெயர் மாற்றம்

Mudhaliyappan Guna Sekar, தந்தை பெயர்: Mudhaliyappan, பிறந்த தேதி: 06.02.1957, ப.எண்.13A, பு.எண்.82, கூகையூர் ரோடு, சின்ன சேலம் அஞ்சல், தாலுக்கா, கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டம் – 606201, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **MUDHALIYAPPAN GUNA SEKARAN,** என்று அழைக்கப்படுகிறேன்.

Mudhaliyappan Guna Sekar

பெயர் மாற்றம்

MAHESH S, தந்தை பெயர்: Subramanian E, பிறந்த தேதி: 28.11.1979, பு.எண்.29, ப.எண்.13/2, வள்ளலார் தெரு, பத்மநாபா நகர், சூளைமேடு, சென்னை – 600 094, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **MAGESH S,** என்று அழைக்கப்படுகிறேன்.

MAHESH S

பெயர் மாற்றம்

JHOSHNA, கணவர் பெயர்: Jeetendra Kumar, பிறந்த தேதி: 07.05.1988, எண்.13/14, சுப்பு செட்டி தெரு 1வது மாடி, பார்க் டவுன், சென்னை – 600 003, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **JYOTHSNA,** என்று அழைக்கப்படுகிறேன்.

JHOSHNA

VEHICLE FOR SALE

CB_FORCE TEMPO TRAVELLER
Fully Built Passenger
Make : **FORCE**
Model : **FORCETTFBP**
Reg. No : **TN 85 C 7465**
Year of Manufacturing: **2016**
Under Hypothecation with
M/s.KOTAK MAHINDRA BANK LTD.,
is under sale in its
"As is where is Condition"
Interested parties can give their Quotations within 3 days to

KOTAK MAHINDRA BANK LIMITED
CV- Division Recovery, 8th Floor, TVH Agnitio Park, Old Mahabalipuram Road, Kandhanchavadi, Chennai - 600 096.
Contact No: 044 - 6624 8045 / 6624 8044

பெயர் மாற்றம்

LAKSHMANA PERUMAL SRINIVASAN,
B-6, பிளாக்-I, சிட்டி ஸ்கொயர் அப்பார்ட்மெண்ட்ஸ், 4/262, ராஜீவ் காந்தி சாலை, OMR, கந்தஞ்சாவடி, சென்னை-96 என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **ANGAPPA MUDALIAR LAKSHMANA PERUMAL SRINIVASAN** என்று அழைக்கப்படுகிறேன்.

LAKSHMANA PERUMAL SRINIVASAN

பெயர் மாற்றம்

Heena Sanjaykumar Shah, கணவர் பெயர்: Sanjay Mahendrabhai Shah, பிறந்த தேதி: 29.05.1972, எண்.12/6, 1வது மாடி, டி.என்.எச்.பி. ப்ளாட்ஸ், மேற்கு சர்விஸ் ரோடு, நொளம்பூர், சென்னை–600 095, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **PURNIMA BEN SHAH,** என்று அழைக்கப்படுகிறேன்.

Heena Sanjaykumar Shah

பெயர் மாற்றம்

Mohamedgani Farook (Kader Batcha), தந்தை பெயர்: Mohamed Gani, பிறந்த தேதி: 13.07.1964, பு.எண்.46, ப.எண்.300, லிங்கி செட்டி தெரு, மண்ணடி, சென்னை –600 001, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **MOHAMEDFAROOK MUHAMMEDGANI,** என்று அழைக்கப்படுகிறேன்.

Mohamedgani Farook (Kader Batcha)

பெயர் மாற்றம்

Surname: Chintam, Given Name: Chandini, தந்தை பெயர்: Brahmanandha Reddy, பிறந்த தேதி: 08.03.1998, எண்.35/36, 7வது குறுக்கு தெரு, சௌாய் நகர் மேற்கு, சென்னை– 600 030, என்ற முகவரியில் வசிக்